

We Shine Academy™
guiding you to get through
தினசரி நடப்பு நிகழ்வுகள்
Useful for
TNPSC,
POLICE,
BANK
Exams
ஜனவரி
26
26-01-2021
Happy
New Year
2021
தினகரன்
தி இந்து
தினத் தந்தி
தினமலர்
தினமணி

# உலக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- போர்ச்சுக்கல் அதிபர் தேர்தலில் தற்போதையை அதிபர் மார்சிலோ ரெபெலோ டிசோசா மீண்டும் வெற்றி பெற்றார்.

# தேசிய செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- ஐ.நா அமைப்பின் உயர்நிலை சமூக பொருளாதார ஆலோசனைக் குழுவில் இந்தியாவை சேர்ந்த பொருளாதார நிபுணர் ஜெயதி கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார் மற்றும் 19 சர்வதேச பொருளாதார நிபுணர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

- புதியரக ஆகாஷ் ஏவுகணை ஒடிஸாவின் சண்டிபூர் கடற்கரைப் பகுதியில் பரிசோதிக்கப்பட்டது. சோதனையில் செலுத்தப்பட்ட ஆகாஷ் ஏவுகணை தரையிலிருந்து வானிலுள்ள இலக்கை துல்லியமாக இடைமறித்து அழித்தது. இந்த ஏவுகணையை தேவைப்படும் இடங்களுக்கு எளிதாக எடுத்துச் செல்ல முடியும்.

- ஆண்டு தோறும் போலீஸ் சிறை மற்றும் தீயணைப்பு துறைகளில் சிறந்த முறையில் பணியாற்றியவர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை மத்திய அரசு வழங்கி வருகிறது. இந்த ஆண்டு 20 பேர் ஜனாதிபதி விருதுகளை பெறுகின்றனர்.

- நாட்டின் மிக உயரிய பத்தம விருதுகளில் தமிழகத்திற்கான பத்ம விபூஷண் விருதுக்கு எஸ்.பி. பாலசுப்ரமணியம், பத்ம ஸ்ரீ விருதுக்கு சாலமன் பாப்பையா உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
  - இந்திய மகளிர் கூடைப்பந்து அணியின் வீராங்கனை மௌமா தாஸீம் பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்வாகியுள்ளனர்.
  - பத்ம விபூஷன் விருதுக்கு 7 பேரும், பத்ம பூஷண் விருதுக்கு 10 பேரும், பத்ம ஸ்ரீ விருதுக்கு 102 தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- 40 பேருக்கு ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள் வழங்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். இவற்றில் சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் ஒருவருக்கும், உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் 8 பேருக்கும், ஜீவன் ரக்ஷா பதக்கம் 31 பேருக்கும் வழங்கப்படுகிறது.

- திரிபுரா மாநிலத்தில் 6 முதல் 12 வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா இலவச நாப்கின்கள் வழங்கும் கிஷோரி சுஷிதா அபியான் திட்டத்தை திரிபுரா மாநில அரசு தொடங்கியுள்ளது.

# தமிழக செய்திகள்

We Shine Academy Guiding you to get through

- சென்னை மாநகராட்சியின் தேர்தல் தூதராக வாஷிங்டன் சுந்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தமிழகத்தை சேர்ந்த கிரிக்கெட் வீரர் வாஷிங்டன் சுந்தர் சமீபத்தில் நடந்து முடிந்த ஆஸ்திரேலியா கிரிக்கெட் தொடரில் தனது முத்திரையை பதித்திருந்தார். IPLல் பெங்களூரு அணியிலும், தமிழ்நாடு கிரிக்கெட் பிரிமியர் லீக் போட்டியில் தூத்துக்குடி அணிக்காகவும் விளையாடி வருகிறார்.

- சுகாதார காப்பீட்டின் தயாரிப்பு தரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்க சுபாஷ் சந்திர குந்தியா தலைமையில் 10 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

- Skoch சேலஞ்சர் விருது 2 அமைச்சகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சகத்துக்கு மின்னாளுமைக்கான விருதும், மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைசக்கத்துக்கு வெளிப்படை தன்மையடன் கூடிய சிறந்த ஆளுமைக்கான விருதும் வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய சுற்றுலா தினமாக ஜனவரி 25 அன்று அனுசரிக்கப்படுகிறது.

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

- பல்வேறு துறையில் சாதனையாளர்களுக்கு தமிழக அரசு சார்பில் விருதுகள் வழங்கப்பட்டது.
  - தமிழகத்தில் வீரதீர செயல்களை புரிந்த 3 பேருக்கு அண்ணா பதக்கங்களை முதல்வர் பழனிசாமி வழங்கினார்.
  - தமிழகத்தில் கள்ள சாராயத்தை கட்டுபடுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட காவல்துறையினருக்கு ‘காந்தியடிகள் காவலர் பதக்கம்’ வழங்கப்பட்டது.

- தமிழகத்தில் சிறந்த காவல் நிலையங்களுக்கான கோப்பையை முதலிடம் - சேலம் நகர காவல் நிலையம் 2ம் இடம் திருவண்ணாமலை நகர காவல்நிலையமும் பெற்றது.

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

# நியமன செய்திகள்

We Shine Academy Guiding you to get through

- அமெரிக்க அதிபர் ஜோபைடன் ஆட்சியில் மேலும் சில இந்திய அமெரிக்கர்கள் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
  - அமெரிக்கா எரிசக்தி துறை தலைவராக தரக்ஷா நியமக்கப்பட்டுள்ளார்.
  - அறிவியல் அவுவலக தலைவராக தன்யா தாஸ் நியமிக்கபட்டுள்ளார்.
  - பொது ஆலோசனை அலுவலக சட்ட ஆலோசராக நாராயன் சுப்ரமணியன் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - புதை படிவ எரிசக்தி அலுவலகத்தின் தலைவராக சுச்சி தலாட்டி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
  - சர்வதேச மேம்பாட்டு நிதிக் கழகத்தின் செயல் தலைவராக தேவ் ஜெகதீசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## திருக்குறள்

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு”

**விளக்கம்:**

மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

We Shine Academy Guiding you to get through
We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

# மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through